செ.வெ.எண்.03 நாள்.02.10.2017.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், வடக்கு காருகுறிச்சியில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளினையொட்டி நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்.

-------

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், வடக்கு காருகுறிச்சி சமுதாய நலக்கூடத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளினையொட்டி கிராம சபை கூட்டம் கிராம பெரியவர் திரு.வெல்லப்பாண்டி அவர்கள் தலைமையில் இன்று (02.10.2017) நடைபெற்றது. இக்கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார். கிராம சபை கூட்டத்தில் குடிநீர் சிக்கனம், கழிப்பறைகளை பயன்படுத்துதல், சுகாதார கிராமம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், கிராம வரவு–செலவு கணக்கு உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், பயிர் காப்பீட்டுத் திட்டம், வேளாண்மை பொறியியல் துறையின் மானியம் வழங்கும் திட்டம், மகளிர் திட்டத்தின் மூலம் பல்வேறு உதவிகள் வழங்கும் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பணிகள் விவரம் ஆகியவைகள் குறித்து துறை அலுவலர்கள் பொதுமக்களுக்கு தெரிவித்தனர்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

கிராமசபை கூட்டத்தில் கிராமத்திலுள்ள பல்வேறு பிரச்சனைகள் புதிதாக செய்யப்பட வேண்டிய அடிப்படை தேவைகள், அடுத்த ஆண்டிற்கு கிராமத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் பல்வேறு அரசின் திட்டங்களுக்கு பயனாளிகள் தேர்வு குறித்தும் முடிவு மற்றும் ஆலோசனைகள் செய்ய கிராமசபை கூட்டம் நடத்தப்படுகிறது. இங்கு அடிப்படை தேவைகள் குறித்தும், குடிநீர் சீராக வழங்க கோருதல், தெருவிளக்கு பராமரிப்பு, கன்னடியன் கால்வாயில் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு உள்பட பல்வேறு நல்ல பல தேவைகளை நீங்கள் கோரிக்கையாக வைத்துள்ளீர்கள். கன்னடியன் கால்வாயில் விவசாய தேவைக்கு தண்ணீர் திறக்க அரசு ஆணை பெற்று, விரைவில் தண்ணீர் திறக்கப்படும். குடிநீர் கிராம மக்களுக்கு சீரான வகையில் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடந்த ஆறு மாதங்களில் இக்கிராமத்தில் டெங்கு காய்ச்சல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், திறந்த வெளி கழிப்பிடமில்லா கிராமமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சுத்தமாகவும், சுகாதாரமாகவும் கிராமத்தை பேணி பாதுகாக்க வேண்டும். வேளாண் காப்பீட்டு திட்டத்தை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமது மாவட்டத்தில் உள்ள 8.50 இலட்சம் குடும்ப அட்டைகளில் 7.50 இலட்சம் குடும்பங்களுக்கு ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குடும்பங்களுக்கு இம்மாத இறுதிக்குள் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்படும். அரசின் திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி வாழ்க்கைதரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டுமென பேசினார்.

இக்கூட்டத்தில், தோட்டக்கலைத் துறையின் மூலம் வீட்டு காய்கறி தோட்டம் அமைக்க மானிய விலையில் வீட்டு காய்கறி தோட்டம் அமைக்கும் கிட் 7 நபர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

கூட்டத்தில், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.கனகராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (வளர்ச்சி) திரு.முத்து இளங்கோ, (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் திரு.ஹெட்சி லீனா, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.பாலாஜி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.லோகசங்கர், திருமதி.மங்களம் கோமதி, அரசு அலுவலர்கள் உள்பட கிராம மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.